Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 364

வெள்ளிக்கிழமை
25 நவம்பர் 2022

கார்த்திகை 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## கனடாவுக்கு கள்ளத்தோணி; ஒருவர் வியட்நாமில் சாவு!

சாவகச்சேரி, நவ.25
சட்டவிரோதப் படகுப் பயணம் மூலம் கனடா செல்ல முயன்று தற்போது வியட்நாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை ஏதிலிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த 32 வயதான இளம் குடும்பஸ்தர் ஒருவரே உயிரிழந்துள்ளார்

11

## 'ஐஸுக்கு' தூக்கு!

கொழும்பு, நவ.25
5 கிராமுக்கு அதிகமான ஐஸ் ரக போதைப் பொருளை உடைமையில் வைத்திருக்கும் அல்லது விற்பனை செய்யும் நபர்களுக்கு தூக்குத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கப் படவுள்ளது. நச்சுப் பொருள், அபின்

11

## இறக்குமதி தடையில் சிறு தளர்வு

கொழும்பு, நவ.25
அத்தியாவசியமற்ற சில பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தடை ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் முதல் இந்தத் தளர்வு நடைமுறைக்கு வருகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
சூட் கேஸ்கள், பிரீஃப் கேஸ்கள், மூக்குக் கண்ணாடி

10

## 0.3 பில்லியன் டொலருடன் இலங்கை!

கொழும்பு, நவ.25
இலங்கையில் செலவிடக்கூடிய வெளிநாட்டு ஒதுக்கத்தின் பெறுமதி 0.3 பில்லியன் அமெரிக்க டொலர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

# அடக்குமுறை அரசுக்கு கடிவாளம் போடுக!

### சர்வதேசத்தை வலியுறுத்துகின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

### ஜனாதிபதி ரணிலின் போக்குக்கும் கடும் கண்டனம்

**கொழும்பு, நவம்பர் 25**

**அமைதியான போராட்டம் போன்ற அடிப்படை உரிமைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் மதிப்பளிக்கவேண்டுமென்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

11

## யானை தாக்கி ஒருவர் மரணம்!

முல்லை., நவ.25
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.
ஒட்டுசுட்டான், சின்னச்சாளம்பனில் வசித்து வருகின்ற பச்சைமுத்து புலேந்திரன் (வயது-48) என்பவரே உயிரிழந்தவராவார்.
ஒட்டுசுட்டான், மாங்குளம் வீதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இவர் வாழ்வாதார நடவடிக்கையாக மண்வெட்டிப் பிடிகளுக்கான தடிகளை வெட்டுவதற்காகக் காட்டுக்குச் சென்ற போதே

09

தமிழரசுக்கும் கூட்டமைப்புக்கும் விரைவில் புதிய தலைவர்கள்!
மாவை தெரிவிப்பு
விரிவு - பக். 03

ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு
சஜித் அறிவிப்பு
விரிவு - பக். 05

## ரணிலின் தந்திர வலைக்குள் தமிழ்க் கட்சிகள் சிக்கக்கூடாது

### ஸ்ரீகாந்தா வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.25
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனமுரண்பாடுகளைத் தீவிரமடையச் செய்த ஒற்றையாட்சி முறைக்குள் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தி தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அதற்குள் முடக்கவே திட்டமிடுகின்றார். இந்த அரசியல்

09

## போராட்டங்களை ஒடுக்க கடுமையான நடவடிக்கை

### மீண்டும் ரணில் மிரட்டல்

கொழும்பு, நவ.25
மக்கள் போராட்டங்கள் என்ற போர்வையில் வன்முறைகளுக்கு இடமளிக்கமுடியாது. மனித உரிமை என்ற போர்வையில் அராஜகத்துக்கும்

11



## அரசின் மிரட்டல்களுக்கு அஞ்சாது போராடுங்கள்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, நவ.25
ஜனநாயகத்துக்கு எதிராக அரசாங்கம் வன்மையான முறையில் செயற்படுகிறது. மக்கள் தமது

09

### குருந்தூர்மலை

## விகாரைக்கான கட்டுமானங்கள் நீதிமன்றை அவமதிக்கும் செயல்!

### பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை

முல்லைத்தீவு, நவ.25
முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டளையை அவமதித்து எவரேனும் புதிய கட்டடங்களை அல்லது மேம்படுத்தல்களை அமைத்தால் அது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதமுடியும். அவ்வாறான சம்பவங்கள் நடந்தால் முல்லைத்தீவுப் பொலிஸார் உரியவர்கள் மீது நடவடிக்கை

12

## அறணை கோத்தாவுக்கு; அனுபவிப்பதோ ரணில்!

### உயர்நீதிமன்றை நாடுவேன் என ஜயசுமன தெரிவிப்பு

கொழும்பு, நவ.25
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் கோருவது அவசியமானதாகும். அவரது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பான தனிநபர் பிரேரணையை

09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடைவை கட்டாயமாக்கப்பட்டால் ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவு

## இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து



**கொழும்பு, நவ. 25**

**பெண் ஆசிரியர்களுக்கான ஆடையாக புடைவை கட்டாயமாக்கப்பட்டால் அதற்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவிக்கையில்;

அரச அலுவலர்கள் வசதியான ஆடைகளை அணிந்து அலுவலகங்களில் பணியாற்றுமாறு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை அரசாங்கம் தன்னிச்சையாக மாற்ற முயற்சிக்கின்றது.

அரச அலுவலர்கள் வசதியான உடையில் பணிக்கு வருமாறு வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பொதுவான முடிவாக இருக்க வேண்டும். ஆடை விடயத்தில் வெவ்வேறு நபர்களால் முடிவெடுக்க முடியாது.

ஆசிரியர்கள் புடைவை அணிவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. எதிர்காலத்திலும் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஒருவித நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அவர்களுக்கு சீருடை கொடுப்பனவு ஒன்று வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் விரும்பி புடைவை அணிவார்கள். அது கட்டாயமாக்கப்பட்டால் நாங்கள் நிச்சயமாக கொடுப்பனவை வலியுறுத்துவோம் - என்றார். (ச-இ)

# அரச அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் அடிபணியோம்

## ஜனாதிபதிக்கு சஜித் பதில்

கொழும்பு, நவ. 25

படையினரைக் களமிறக்கியும், அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியும் மக்கள் போராட்டம் ஒடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை. ஜனநாயக வழியிலான மக்கள் போராட்டங்களுக்கு நாம் தலைமைத்துவம் வழங்குவோம். அதனை யாராலும் தடுக்க முடியாது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 'போராட்டம் என்ற போர்வையில் எவராவது வன்முறையில் ஈடுபட்டாலோ அல்லது அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தாலோ, வீடுகளை கொளுத்தினாலோ அவற்றுக்கு எதிராக சட்டங்களை பயன்படுத்துங்கள். அத்தகைய நபர்களுக்கு எதிராக படையினர் தமது பணிகளை முன்னெடுக்கலாம். ஆனால் ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும், நாட்டை சீரழித்த இந்த அரசாங்கத்துக்கு எதிராகவும் அறவழியில் நாட்டு மக்கள் போராடுவதை எவராலும் தடுக்க முடியாது. தடுப்பதற்கு நாம் இடமளிக்கவும் மாட்டோம்' - என்றார். (ம-44)

# அரசமைப்பு பேரவைக்கு சித்தார்த்தன் நியமனம்!

கொழும்பு, நவ. 25

அரசமைப்புப் பேரவைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாக, நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு இதனைத் தீர்மானித்தது.

21 ஆவது திருத்தத்தின் மூலம் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ள அரசமைப்புப் பேரவையில் 10 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். சபாநாயகர் இதன் தலைவராக செயற்படுவார். பதவி வழியாக பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் அதன் நிரந்தர உறுப்பினர்களாக இருப்பர். ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தலா ஒரு பிரதிநிதியை பெயரிடுவர். நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரிய எதிர்க்கட்சி சார்பில் ஒருவரும், சிவில் சமூகத்தைச் சேர்ந்த மூவரும் அரசமைப்புப் பேரவையில் அங்கம் வகிப்பர். இந்த நிலையிலேயே நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், அரசமைப்புப் பேரவைக்கான உறுப்பினராக த.சித்தார்த்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

21 ஆவது திருத்தத்தின் மூலம் அரசமைப்புப் பேரவை வலுப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய தேர்தல் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு, தேசிய பெறுகை ஆணைக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்களை அரசமைப்புப் பேரவையே ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கும்.

பிரதம நீதியரசர்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், நீதிபதிகள், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், ஒம்புட்ஸ்மன், நாடாளுமன்றச் செயலாளர் ஆகிய நியமனங்களை அரசமைப்புப் பேரவையின் அனுமதியுடனே ஜனாதிபதி நியமிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# கட்சிதான் அவர்களிடம் மக்கள் சக்தி எம்முடன்

## மைத்திரி தரப்பினருக்கு சந்திரிகா பதிலடி

கொழும்பு, நவ. 25

சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்கு முன்னின்று செயற்படுவேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

'கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்வதற்கு முன்னர், சுதந்திரமாக கருத்துக் கோரப்படவேண்டும். அவ்வாறு எதுவும் செய்யப்படவில்லை. கட்சி உறுப்பினரை இடைநிறுத்தும் நடைமுறை கூட தற்போது கட்சியில் இருப்பவர்களுக்கு தெரியவில்லை. இடைநிறுத்தம் பற்றி எனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு செய்தால்கூட எனக்கு பரவாயில்லை. ஏனெனில் மாற்றுத் தரப்பிடம் கட்சிப் பெயர்ப் பலகை மட்டுமே உள்ளது. மக்கள் சக்தி எம்பக்கம் உள்ளது. மைத்திரிபால சிறிசேனவும், தயாசிறியும் கட்சியை ராஜபக்சக்களிடம் ஒப்படைக்கத் திட்டம் தீட்டுகின்றனர்' - என்றார். (ம-44)

# 4 பொருள்களின் விலை சதொசவில் குறைப்பு

கொழும்பு, நவ. 25

நான்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என லங்கா சதொச தெரிவித்துள்ளது.

ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 9 ரூபாவால் குறைக்கப்பட்டு 229 ரூபாவாகவும், கோதுமை மா ஒரு கிலோகிராம் 14 ரூபாவால் குறைக்கப்பட்டு 265 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. பூண்டு ஒரு கிலோகிராம் 30 ரூபாவால் குறைக்கப்பட்டு 495 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 43 ரூபாவால் குறைக்கப்பட்டு 255 ரூபாவாகவும் விற்கப்படும். மேலும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் டின் மீன்கள் நேற்று முதல் ரூ.540க்கு விற்பனை செய்யப்படும் என சதொச மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# சமுர்த்தி அலுவலரின் இடமாற்றம்; மக்களால் கண்டனப் போராட்டம்!



வவுனியா, நவ. 25

வவுனியா இராசேந்திரங்குளம் சமுர்த்தி அலுவலரின் இடமாற்றத்தைக் கண்டித்து அந்தப் பகுதி மக்களால் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இராசேந்திரங்குளம், விநாயகபுரம், பாரதிபுரம், பொன்னாவரசன்குளம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய சமுர்த்தி அலுவலர், இராசேந்திரங்குளம் பகுதி சமுர்த்தி அலுவலராகக் கடமையேற்று 3 வருடங்களான நிலையில் அவருக்குத் தற்போது இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்ததாவது:- சமுர்த்தி அலுவலர் கிராம மக்களுக்கு உதவிகள் செய்யக் கூடியவர். அத்துடன் கொரோனாக் காலங்களில் மக்களின் பாதுகாப்புக்கருதி மக்களின் வீடுகளுக்கே சமுர்த்திக் கொடுப்பனவுகளையும் வழங்கியிருந்தார். மேலும் மக்களின் வீடுகளுக்கு நேரடியாக வந்து மக்கள் நிலை அறிந்து செயற்படுபவர். இவ்வாறான ஒருவரை இடமாற்றம் செய்ய அனுமதிக்க முடியாது - என்றனர். (ஒ-14,110)

# 'றோ' தலைவர் இரகசிய வருகை

கொழும்பு, நவ. 25

இந்தியாவின் பிரதான உளவு அமைப்பான 'ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப்பிரிவு' எனப்படும் 'றோ' அமைப்பின் தலைமை நிர்வாகி சமந்த் கோயல் இலங்கைக்கு இரகசியப் பயணம் மேற்கொண்டு வந்துள்ளார் என கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவர் கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மூடிய அறைக்குள் சந்தித்து முக்கியமான பேச்சுகளை நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கும் கூட்டமைப்புக்கும் விரைவில் புதிய தலைவர்கள்!

## மாவை தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 25**

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு விரைவில் நடைபெறவுள்ளது. அதன்போது தமிழரசுக் கட்சிக்குப் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார். அதன்பின்னர் தமிழரசுக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஏனைய பங்காளிக் கட்சியினரும் இணைந்து கூட்டமைப்பின் புதிய தலைவரைத் தெரிவு செய்வார்கள் - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.**

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைமைகள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தற்போது உடல் வலிமை குறைந்து இருந்தாலும் அவருடைய அனுபவம், அவருடைய ஆற்றல், அவர் வெளியிடும் சொற்கள் எப்போதும் வலிமையுடையவையாக இருக்கின்றன. தந்தை செல்வாவும் தனது நீண்டகால வரலாற்றில் உண்ண முடியாமல், நடக்க முடியாமல், உரத்துப் பேசமுடியாமல் இருந்த போதிலும் தமிழ் மக்கள் அவரை அங்கீகரித்து இருந்தார்கள். இறுதி வரைக்கும் அவர் அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தார். தமிழரசுக் கட்சியில் அவர் தலைவராக, செயலாளராக, பெருந்தலைவராகக் கூட இருந்துள்ளார். ஜனநாயக வழியில் அந்தப் பதவிகளுக்கு அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஆனாலும், எங்களுடைய தமிழரசுக் கட்சியிலே ஒரு நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது, இப்போதும் அது நடக்கப் போகின்றது. கட்சியில் தந்தை செல்வா போல் யார் தலைவராக இருந்தாலும் ஓராண்டு அல்லது ஈராண்டுகளுக்கிடையில் மத்திய செயற்குழுவின் தீர்மானத்துக்கமைய நடைபெறுகின்ற மாநாடுகளில் நாங்கள் அடுத்தடுத்த தலைவர்களையும் தெரிவு செய்து வந்திருக்கின்றோம். மாநாட்டில் தலைவர் தெரிவு செய்யப்பட்டால் அவர்தான் கட்சியின் தலைவராகச் செயற்படுகின்ற நிலைமை இருக்கின்றது. இந்த நடைமுறை அனைத்துக் கட்சிகளிலும் இருக்கின்றது எனச் சொல்ல முடியாது.

விரைவில் எங்கள் தமிழரசுக் கட்சியின் செயற்குழு கூடும், பொதுக்குழுகூடும். மாநாட்டுக்கான திகதியை டிசெம்பரில் அல்லது சில மாதங்களுக்குள் நிர்ணயிக்கவுள்ளோம். அதற்கமைய கட்சியின் மாநாடு கூடி கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வோம். அதில் எந்தவிதமான தயக்கமும் கிடையாது. அதன்பின்னர் எங்களுடைய தமிழரசுக் கட்சியினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற ஏனைய பங்காளிக் கட்சியினரும் இணைந்து கூட்டமைப்பின் புதிய தலைவரைத் தெரிவு செய்வார்கள்' - என்றார். (ம-22)



# பஸ் - டிப்பர் விபத்து; 10 நபர்கள் காயம்!

## கனகராயன்குளத்தில் சம்பவம்

வவுனியா, நவ. 25

பஸ்ஸுடன் டிப்பர் மோதியதில் டிப்பர் சாரதி, பஸ்ஸில் பயணித்தோர் உட்பட 10 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் வவுனியா - கனகராயன்குளம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு இடம்பெற்றது.

தங்காலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ்ஸும் மாங்குளத்திலிருந்து கனகராயன்குளம் நோக்கிச் சென்ற டிப்பரும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் டிப்பர் வாகன சாரதி, பஸ்ஸில் பயணித்தோர் உட்பட 10 பேர் காயமடைந்தனர். காயமடைந்த 10 பேரில் 6 பேர் மாங்குளம் மருத்துவமனையிலும் 4 பேர் வவுனியா மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-14,110,18)

# மண்டைதீவில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 25

மண்டைதீவு பகுதியிலுள்ள அட்டைப்பண்ணையில் பணிபுரிந்து வந்த இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

பளை வண்ணாங்கேணி பகுதியைச் சேர்ந்த தவராசா நிதர்சன் (வயது-21) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

# களைநாசினி விலை திடீரென அதிகரிப்பு

## நெற்செய்கையாளர்கள் சிரமம்

கட்டுப்பாட்டு விலையை விட களைநாசினிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதால் காலபோக நெற்செய்கையாளர்கள் களைகளை அழிக்க பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இம்முறை உரிய காலத்தில் மழை பெய்ததோடு, உர வகைகளும் கமநல சேவைகள் நிலையத்தால் விநியோகிக்கப்பட்டன. ஆனால் களைநாசினிகளின் விலை அதிகரித்துள்ளது. 18 ஆயிரம் ரூபா விலை பொறிக்கப்பட்ட களைநாசினிகள் தற்போது 22 ஆயிரத்து 500 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ஓ-14,9)



# 4 அடி வள்ளுவர் சிலை வலி.வடக்கில் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

30 வருடங்களின் பின் மீள்குடியமர்த்தப்பட்ட வலி. வடக்கு திருவள்ளுவர்புரத்தில் கருங்கல்லில் அமைக்கப்பட்ட 4 அடி உயரமான திருவள்ளுவர் சிலை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் வலி. வடக்கு பகுதிகளை படையினர் உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தினர். இதன்போது வள்ளுவர்புரம் பகுதியில் காணப்பட்ட திருவள்ளுவர் சிலை அழிக்கப்பட்டது. நல்லாட்சி அரசின் காலப்பகுதியில் வலி. வடக்குப் பகுதிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்ட நிலையில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். தற்போது திருவள்ளுவர்புரம் கிராம மக்களின் முயற்சியில் சுமார் 7 லட்சம் ரூபா செலவில் அழிக்கப்பட்ட சிலை இருந்த இடத்தில் கருங்கல்லினால் நிறுவப்பட்டு தையிட்டி கிழக்கு வள்ளுவர்புரம் கிராமஅலுவலர் பிரிவிலுள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினரால் நேற்று வியாழக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலக உதவி பிரதேச செயலர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், வலி.வடக்கு பிரதேச சபையினர், வலி வடக்கு மீள்குடியேற்ற சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர். (ச-26)



# போதையை ஒழிப்போம்; மனிதனாக வாழ்வோம்

## மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்களால் கவனவீர்ப்பு

"போதையை ஒழிப்போம் மனிதனாக வாழ்வோம்" என்ற தொனிப்பொருளிலான கவனவீர்ப்புப் பேரணியும் வீதியோர நாடகமும் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்டது. மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஆரம்பமான கவனவீர்ப்புப் பேரணி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஊடாக ஆனைக்கோட்டைச் சந்தியை அடைந்து மீண்டும் மானிப்பாய் மகளிர் கல்லூரியை சென்றடைந்தது.

"எங்கள் வீட்டில் சாராய நாற்றம் இல்லை அதனால் நாம் என்றும் மகிழ்ச்சியாக இருப்போம்! ", "உங்கள் கைகளாலேயே உங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள்!" "உங்கள் பிள்ளைகள், சகோதரர்கள், உறவுகள், நண்பர்கள் இத்தகைய பழக்கத்திலிருந்து மீள தயாராகுங்கள்!" "சாராயம் குடித்துவிட்டு [illegible] டுவது பலவீனமானவர்களிடம் மட்டுமே!"," உணர்வினை மறந்து உண்மை நிலை மறந்து கனவுக்குள் காலம் செல்ல உயிர் குடிக்கும் பேய்!"," நினைவில் வைத்துக் கொள் நீ இழுத்து குறைப்பது சிகரெட்டை அல்ல உன் வாழ்க்கை நாளை!","இளைஞனே விஷத்தினை அமுதாய் விழுங்கிட எப்படி முடிகிறது?" உள்ளிட்ட வாசகங்களை எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை வெளிப்படுத்தினர். (ஒ-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கும் கூட்டமைப்புக்கும் விரைவில் புதிய தலைவர்கள்!

## மாவை தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 25**

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு விரைவில் நடைபெறவுள்ளது. அதன்போது தமிழரசுக் கட்சிக்குப் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார். அதன்பின்னர் தமிழரசுக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஏனைய பங்காளிக் கட்சியினரும் இணைந்து கூட்டமைப்பின் புதிய தலைவரைத் தெரிவு செய்வார்கள் - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.**

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைமைகள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தற்போது உடல் வலிமை குறைந்து இருந்தாலும் அவருடைய அனுபவம், அவருடைய ஆற்றல், அவர் வெளியிடும் சொற்கள் எப்போதும் வலிமையுடையவையாக இருக்கின்றன. தந்தை செல்வாவும் தனது நீண்டகால வரலாற்றில் உண்ண முடியாமல், நடக்க முடியாமல், உரத்துப் பேசமுடியாமல் இருந்த போதிலும் தமிழ் மக்கள் அவரை அங்கீகரித்து இருந்தார்கள். இறுதி வரைக்கும் அவர் அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தார். தமிழரசுக் கட்சியில் அவர் தலைவராக, செயலாளராக, பெருந்தலைவராகக் கூட இருந்துள்ளார். ஜனநாயக வழியில் அந்தப் பதவிகளுக்கு அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஆனாலும், எங்களுடைய தமிழரசுக் கட்சியிலே ஒரு நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இப்போதும் அது நடக்கப் போகின்றது. கட்சியில் தந்தை செல்வா போல் யார் தலைவராக இருந்தாலும் ஓராண்டு அல்லது ஈராண்டுகளுக்கிடையில் மத்திய செயற்குழுவின் தீர்மானத்துக்கமைய நடைபெறுகின்ற மாநாடுகளில் நாங்கள் அடுத்தடுத்த தலைவர்களையும் தெரிவு செய்து வந்திருக்கின்றோம். மாநாட்டில் தலைவர் தெரிவு செய்யப்பட்டால் அவர்தான் கட்சியின் தலைவராகச் செயற்படுகின்ற நிலைமை இருக்கின்றது. இந்த நடைமுறை அனைத்துக் கட்சிகளிலும் இருக்கின்றது எனச் சொல்ல முடியாது.

விரைவில் எங்கள் தமிழரசுக் கட்சியின் செயற்குழு கூடும், பொதுக் குழுகூடும். மாநாட்டுக்கான திகதியை டிசெம்பரில் அல்லது சில மாதங்களுக்குள் நிர்ணயிக்கவுள்ளோம். அதற்கமைய கட்சியின் மாநாடு கூடி கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வோம். அதில் எந்தவிதமான தயக்கமும் கிடையாது. அதன்பின்னர் எங்களுடைய தமிழரசுக் கட்சியினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற ஏனைய பங்காளிக் கட்சியினரும் இணைந்து கூட்டமைப்பின் புதிய தலைவரைத் தெரிவு செய்வார்கள்' - என்றார். (ம-22)



# பஸ் - டிப்பர் விபத்து; 10 நபர்கள் காயம்!

## கனகராயன்குளத்தில் சம்பவம்

வவுனியா, நவ. 25

பஸ்ஸுடன் டிப்பர் மோதியதில் டிப்பர் சாரதி, பஸ்ஸில் பயணித்தோர் உட்பட 10 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் வவுனியா - கனகராயன்குளம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு இடம்பெற்றது.

தங்காலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ்ஸும் மாங்குளத்திலிருந்து கனகராயன்குளம் நோக்கிச் சென்ற டிப்பரும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் டிப்பர் வாகன சாரதி, பஸ்ஸில் பயணித்தோர் உட்பட 10 பேர் காயமடைந்தனர். காயமடைந்த 10 பேரில் 6 பேர் மாங்குளம் மருத்துவமனையிலும் 4 பேர் வவுனியா மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14,110,18)

# மண்டைதீவில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 25

மண்டைதீவு பகுதியிலுள்ள அட்டைப்பண்ணையில் பணிபுரிந்து வந்த இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

பளை வண்ணாங்கேணி பகுதியைச் சேர்ந்த தவராசா நிதர்சன் (வயது-21) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

# களைநாசினி விலை திடீரென அதிகரிப்பு

## நெற்செய்கையாளர்கள் சிரமம்

கட்டுப்பாட்டு விலையை விட களைநாசினிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதால் காலபோக நெற்செய்கையாளர்கள் களைகளை அழிக்க பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இம்முறை உரிய காலத்தில் மழை பெய்ததோடு, உர வகைகளும் கமநல சேவைகள் நிலையத்தால் விநியோகிக்கப்பட்டன. ஆனால் களைநாசினிகளின் விலை அதிகரித்துள்ளது. 18 ஆயிரம் ரூபா விலை பொறிக்கப்பட்ட களைநாசினிகள் தற்போது 22 ஆயிரத்து 500 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ஒ-14,9)



# 4 அடி வள்ளுவர் சிலை வலி.வடக்கில் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

30 வருடங்களின் பின் மீள்குடியமர்த்தப்பட்ட வலி. வடக்கு திருவள்ளுவர்புரத்தில் கருங்கல்லில் அமைக்கப்பட்ட 4 அடி உயரமான திருவள்ளுவர் சிலை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் வலி. வடக்கு பகுதிகளை படையினர் உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தினர். இதன்போது வள்ளுவர்புரம் பகுதியில் காணப்பட்ட திருவள்ளுவர் சிலை அழிக்கப்பட்டது. நல்லாட்சி அரசின் காலப்பகுதியில் வலி. வடக்குப் பகுதிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்ட நிலையில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். தற்போது திருவள்ளுவர்புரம் கிராம மக்களின் முயற்சியில் சுமார் 7 லட்சம் ரூபா செலவில் அழிக்கப்பட்ட சிலை இருந்த இடத்தில் கருங்கல்லினால் நிறுவப்பட்டு தையிட்டி கிழக்கு வள்ளுவர்புரம் கிராமஅலுவலர் பிரிவிலுள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினரால் நேற்று வியாழக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலக உதவி பிரதேச செயலர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், வலி.வடக்கு பிரதேச சபையினர், வலி வடக்கு மீள் குடியேற்ற சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர். (ச-26)



# போதையை ஒழிப்போம்; மனிதனாக வாழ்வோம்

## மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்களால் கவனவீர்ப்பு

"போதையை ஒழிப்போம் மனிதனாக வாழ்வோம்" என்ற தொனிப் பொருளிலான கவனவீர்ப்புப் பேரணியும் வீதியோர நாடகமும் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்டது. மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஆரம்பமான கவனவீர்ப்புப் பேரணி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஊடாக ஆனைக்கோட்டைச் சந்தியை அடைந்து மீண்டும் மானிப்பாய் மகளிர் கல்லூரியை சென்றடைந்தது.

"எங்கள் வீட்டில் சாராய நாற்றம் இல்லை அதனால் நாம் என்றும் மகிழ்ச்சியாக இருப்போம்! ", "உங்கள் கைகளாலேயே உங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள்!" "உங்கள் பிள்ளைகள், சகோதரர்கள், உறவுகள், நண்பர்கள் இத்தகைய பழக்கத்திலிருந்து மீள தயாராகுங்கள்!" "சாராயமும் [illegible] குடித்துவிட்டு [illegible] டுவது பலவீனமானவர்களிடம் மட்டுமே!", "உணர்வினை மறந்து உண்மை நிலை மறந்து கனவுக்குள் காலம் செல்ல உயிர் குடிக்கும் பேய்!", "நினைவில் வைத்துக் கொள் நீ இழுத்து குறைப்பது சிகரெட்டை அல்ல உன் வாழ்க்கை நாளை!", "இளைஞனே விஷத்தினை அமுதாய் விழுங்கிட எப்படி முடிகிறது?" உள்ளிட்ட வாசகங்களை எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை வெளிப்படுத்தினர். (ஒ-14,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
09 . 03 . 1951

மறைவு
23 . 11 . 2022

## திருவாளர் கந்தையா தர்மலிங்கம்

### (உரிமையாளர் நியூ குறிஞ்சி பாமசி - திருநெல்வேலி)

மாவடி வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் கந்தையா தர்மலிங்கம் (உரிமையாளர் நியூ குறிஞ்சிபாமசி - திருநெல்வேலி) அவர்கள் கடந்த (23.11.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இரத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், விஜயலக்சுமியின் கணவரும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, லோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாம்பசிவம், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஜெயலக்சுமி, யோகலக்சுமி, சோமசுந்தரம், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் உத்தமலக்சுமி, சுந்தரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் முத்துலிங்கம், கலைரதி, காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் ரவிச்சந்திரன், மோகனா ஆகியோரின் அன்புச் சகலனும், தபோதினி-பாலகுமார் (சுவிஸ்), தர்மினி - கிருபாகரன், அகிலன் - மயூரி, தயசீலன் - கல்யாணி, ஆறுமுகதாஸ் - சிவாஜினி (சுவிஸ்), ஜெயக்குமாரி-கனகநாயகம் (கொழும்பு), ஜெயந்தினி - குகானந்தன் (கனடா), ஆனந்தசிவம் - றேனுகா (சுவிஸ்), சுதர்சன் - அபிராமி (சுவிஸ்), சந்திரகுமார் - மீரா, சுபாசினி - குமரன், யசோதரன் - சோனா (சுவிஸ்), யசிதா - பிரகலாதீஸ்வரன் (கனடா), யசிகரன் - அர்ச்சனா (கனடா), ரஜிந்தா - ஐங்கரன் ஆகியோரின் சித்தப்பாவும், சத்தியேந்திரா (கொழும்பு), சத்தியலோஜினி-ஜெயந்திகுமார், சத்தியவாணி - நடனேந்திரன், காயத்திரி - உதயசூரியன் (லண்டன்), பிருந்தா -மஞ்ஜீவன், கௌசிகா - ராஜீவன், பிரணவன் - ஆரணி, ஜெகசோதி, சுகானா (ஜேர்மனி) ஆகியோரின் மாமாவும், பவிந்தன், பவிசன், பவித்திரா, சோபியா, தனுஜன், அட்சிகா, அட்சரன், யஷ்வினி, விதுர்சிகா, லதுர்சனன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் பூர்வீக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவடி வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
021 225 5204, 077 881 4204

(CR 38532) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இனியும் வேண்டாம் சரணாகதி

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சு பலமட்டங்களிலும் வெவ்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. 'சொல்வதெல்லாம் செய்வாரா?' என்ற கேள்வி ஒருபுறம் இருந்தாலும் ரணிலின் பேச்சையொட்டிய அரசியல் கட்சிகளின் பிரதிபலிப்புக்கள் சில கேள்விகளை எழுப்பியிருக்கின்றன. விமல் வீரவன்ஸ தரப்பினர் 'ஒற்றையாட்சி அரசமைப்பை பாதுகாப்பதற்காகவே படையினர் உயிர்த் தியாகங்களைச் செய்திருக்கின்றார்கள். எனவே ஒற்றையாட்சியே புதிய அரசமைப்பில் பாதுகாக்கவேண்டும்' என்று வலியுறுத்தியிருக்கின்றனர். அதேபோல சஜித் பிரேமதாஸ '13ஆவது திருத்தச் சட்டத்தை அடியொற்றிய – ஒற்றையாட்சியை தழுவிய அரசமைப்புக்கு ஆதரவு' என்றும் அறிவித்திருக்கின்றார்.

இவ்வாறானதொரு சூழலில் , கடந்த ஜனாதிபதித் தெரிவின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் எடுத்த முடிவு சரியானதா என்ற கேள்வி எழுகின்றது. ஜனாதிபதித் தெரிவு தொடர்பில் ஆராய்ந்த கூட்டத்தில், இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தொலைபேசி மூலம் கூறியதற்கு அமைவாகவே டலஸ் அணியினரை கூட்டமைப்பினர் ஆதரித்ததாகக் கூறப்படுகின்றது.

டலஸை ஆதரிக்க கூட்டமைப்பு முடிவு எடுத்த பின்னர் அதனை நியாயப்படுத்தும் வகையில், டலஸ் அழகப்பெரும இனவாதி இல்லை என்றும் அவர் ஊழல் குற்றச்சாட்டுக்கள் எதிலும் தொடர்பில்லாதவர் எனவும் கூட்டமைப்பினர் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் ஜனாதிபதித் தெரிவின்போது டலஸ் அழகப்பெருமவை ஆதரித்தவர்கள் அல்லது அவரது அணியிலிருந்தவர்கள் யார்? விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோரே டலஸ் அழகப்பெருமவின் அணியிலிருந்தனர். சஜித் பிரேமதாஸ இறுதி நேரத்தில் டலஸ் அணியை ஆதரித்திருந்தார். விமல் அணியினர் இப்போது அரசியல் தீர்வு விடயத்தில் ஒற்றையாட்சி என்ற காலாவதியான, முரண்களை வளர்க்கும் கருத்துக்களையே அன்று முதல் கூறி வருகின்றனர். அப்படியானால் கூட்டமைப்பு ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்றுக் கொண்டுதான் டலஸை ஆதரித்ததா என்ற கேள்வி எழுகின்றது. இப்போது ''சமஷ்டி அரசமைப்பு'' என்று கிளிப்பிள்ளைபோல திரும்பத் திரும்பச் சொல்லும் கூட்டமைப்பினர், டலஸ் அணியினரை ஆதரிக்கும்போது இந்தக் கொள்கையை எங்கே கொண்டுபோய் அடகு வைத்திருந்தார்கள்?

விமல் வீரவன்ச அணியினர், சஜித் தரப்பினர் ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சூழலில் இப்படிப்பட்ட தரப்பினரை ஆதரித்தமை தவறு என்பதை பகிரங்கமாக – வெளிப்படையாக ஏற்றுக் கொள்வதற்கு கூட்டமைப்பு தலைமை தயாரா? அல்லது டலஸ் அழகப்பெருமவை ஆதரித்தமையை சுட்டிக்காட்டி விமல், சஜித் அணியின் கொள்கை நிலைப்பாட்டில் மாற்றத்தை இப்போது கூட்டமைப்பினரால் ஏற்படுத்த முடியுமா? ஜனாதிபதித் தெரிவின்போது தமது மக்களின் நிலைப்பாடுகளை புறந்தள்ளி வெளிச்சக்திகளின் தலையாட்டி பொம்மையாகச் செயற்பட்ட கூட்டமைப்பின் தலைமை இப்போது என்ன சொல்லப்போகின்றது?

இவை எல்லாம் ஒரு புறம் இருந்தாலும், சமஷ்டி நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாகத் தெரிவிக்கும் கூட்டமைப்பினர், இனி முன்னெடுக்கப்படவுள்ள சர்வகட்சி பேச்சிலும் அதில் விட்டுக்கொடுப்பு இல்லாமல் இருக்கவேண்டும். நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது விட்டுக்கொடுப்பு என்ற பெயரில் சரணாகதி அடைந்தமை போன்று இனியும் செயற்படக் கூடாது. அப்படி மீண்டும் நல்லிணக்கச் சமிக்ஞை என்ற பெயரிடலோடு சரணாகதி அரசியலை கூட்டமைப்பு முன்னெடுக்குமானால், அதன் பின்னர் தமிழ் மக்களுக்கும் மீட்சியில்லை, கூட்டமைப்புக்கும் எதிர்காலமில்லை.

### வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2022



"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்"

– மிகைல் கோபர்ச்சேவ் (சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)




# ஒற்றையாட்சியின் கீழ் தீர்வுக்கு நாம் தயார்!

## சஜித் அறிவிப்பு

**கொழும்பு, நவ. 25**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவு வழங்கும். எமது இந்த நிலைப்பாடு என்றும் மாறாது. எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்போம். அதற்குத் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு கூட நாம் தயார் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:- அரசமைப்பின் 13ஆவது திருத்தத் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் பாடமெடுத்துள்ளார். வகுப்பறை போன்று ஒவ்வொருவரை எழுப்பி அதுபற்றி வினவினார். நாம் 13பிளஸ், 13மைனஸ் என ஒருபோதும் கூறியதில்லை. 13இனை இல்லாதொழிக்க வேண்டும் என வலியுறுத்தியதும் கிடையாது. ஆனால் வெளிநாடு சென்றதும் 13 பிளஸ் எனவும், உள்நாட்டில் 13 மைனஸ் எனக் கூறுவதுமே பெரமுனவினரின் அறிவிப்புகளாக இருந்துவருகின்றன. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக்கொண்டு தற்போது உள்ளவாறு அதிகாரங்களைப் பரவலாக்கத்துக்கு நாம் இணக்கம் தெரிவிக்கின்றோம்.

வரவு - செலவுத் திட்டக் கூட்டத்தொடரின் பின்னர், சர்வக்கட்சி கூட்டத்தை கூட்டி, வடக்கு, கிழக்கு பிரச்சினை தொடர்பில் இறுதித் தீர்வொன்றுக்கு வருவதாக ஜனாதிபதி கூறுகின்றார். அந்த வகையில் பிளவுபடாத பிரிக்கமுடியாத நாட்டுக்குள் நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாத்துக்கொண்டு, அதிகாரப் பரவலாக்கத்தை வழங்குவதற்கு நாம் தயார்-என்றார். (ம-44)

# முல்லைத்தீவு ஊடக அமையத்தில் தகவல் கோரிய இராணுவத்தினர்

முல்லைத்தீவிலுள்ள ஊடக அமையத்துக்கு நேற்றுக் காலை சென்ற படையினர், தமக்கு ஊடக அமையம் தொடர்பில் சில தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளனர் என முல்லைத்தீவு ஊடக அமையத்தினர் தெரிவித்துள்ளனர். சீருடை தரித்து வருகைதந்த இரு படையினரே, தம்மை 591 ஆவது படைமுகாமிலிருந்து வருவதாக அடையாளப்படுத்தி தகவல்களை கோரினர் என்று தெரிவித்தனர்.

முல்லைத்தீவு நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் தம்மால் தகவல் திரட்டப்பட்டு வருகின்றன எனவும் அதன் அடிப்படையிலேயே ஊடக அமையத்தின் தகவல்களையும் கோருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர் என ஊடக அமையத்தின் பொருளாளர் தெரிவித்தார்.

"எமது முகாமின் அதிகாரியே விவரங்களைத் திரட்டுமாறு பணித்துள்ளார். ஆனால் எதற்கென்று தெரியாது" என்றனர் படையினர். தகவல் திரட்டுவதன் நோக்கம் தெரியாதவிடத்து அதனை வழங்க முடியாது என ஊடக அமையத்தால் மறுப்புத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றுள்ளனர். (ச-19)

**நாளை** 26.11.2022 சனிக்கிழமை கார்த்திகை 10

சுபநேரம் : 03.12 - 04.42
ராகுகாலம்: 09.12 - 10.42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
28
-
07
-
1947



இறப்பு
24
-
11
-
2022

## திருமதி துரைராசா இருளாயம்மா (கமலா)

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா இருளாயம்மா (கமலா) நேற்று (24.11.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - சண்முகவடிவு தம்பதியினரின் அன்பு மகளும், இராசையா துரைராசாவின் பாசமிகு மனைவியும், அனுசூயா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும், கயேந்திரன், பால்ராஜ், சிவபாக்கியம் (ராணி), குமுதா, ஜெயதேவி, ஜெயமலர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பால்ராஜ், வீரப்பாண்டி ஆகியோரின் சகோதரியும், கமலினியின் மைத்துனியும் துர்திக்கா, ஆருத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2022) வெள்ளிக் கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.166, பலாலி வீதி, திருநெல்வேலி.**

**077 844 5320 (மகள்)**
**077 590 2656 (மருமகன்)**

**தகவல் : குடும்பத்தினர்**

(CS 47831) (3/6)

# நினைவு கூருகின்றோம்

" நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் "
**யோவான்: 11:25**



**அமரர்**
## யோசப் செல்லத்துரை இராஜரட்ணம்

**மண்ணுலகில் 17.06.1924**
**விண்ணுலகில் 25.11.2021**

அரவணைத்த தந்தையாக
அறிவு தந்த ஆசானாக
ஆண்டவரை முன்னிறுத்தி வாழ்ந்த
அடியானின் முதலாம் ஆண்டு நினைவு தினம்

**குடும்பத்தினர், திருச்சபையினர், நண்பர்கள், பழைய மாணவர்கள்.**

(in.21517) (2/6)

# தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் ஆதனம் தொடர்பான உடைமையாக்கற் கட்டளை (Vesting Order) பற்றிய அறிவித்தல் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

**நம்பிக்கை பொறுப்புச் சட்டத்தின் பிரிவு 112இன் கீழான விண்ணப்பம்.**

சிவானந்த ஐயர் செல்வலிங்கம்
கௌரவ செயலாளர்,
ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்,
தொண்டமானாறு.

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன்
ஆலய பரிபாலன சபை சார்பாக

**வழக்கு இலக்கம்: 188/TR/2022**

**மனுதாரர்**

**எதிர்**

செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி, தொண்டமானாறு.

**எதிர் மனுதாரர்**

இதன் கீழ் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் கணேசநாதன் ராங்கநாதன் என்பவரால் தொண்டமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வகைக்காக தர்ம நன்கொடை செய்யப்பட்ட ஆதனம் ஆகும்.

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் இவ் ஆதனம் தொடர்பில் நம்பிக்கைச் சொத்து உடைமை எவரிடம் உள்ளது என்பது குறித்து நிலையற்ற தன்மை தோன்றியுள்ளது.

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் இதன் கீழ் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் தரும சொத்தினை ஆலயத்தின் வகைக்காக நிர்வாகம் செய்ய நம்பிக்கைப் பொறுப்பாளரான செல்வச்சந்நிதி ஆலய பரிபாலன சபையின் பெயரில் ஓர் உடைமையாக்கற் கட்டளை (Vesting Order) பெறும் நோக்கில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கிலக்கம்: நம்பிக்கைச்சொத்து /188/2022 எனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உடைமையாக்கற் கட்டளை (Vesting Order) பெறுவது தொடர்பில் பத்திரிகையில் விளம்பரப்படுத்துமாறு கௌரவ மன்று கட்டளையிட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் மேற்குறித்த செல்வச்சந்நிதி ஆலய பரிபாலன சபைக்கு குறித்த கீழே ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வகைக்காக நன்கொடை அளிக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் ஓர் உடைமையாக்கற் கட்டளை (Vesting Order) வழங்கப்படக் கூடாதென ஆட்சேபனை ஏதுமிருப்பின் குறித்த உடைமையாக்கற் கட்டளை ஏன் வழங்கப்படலாகாது என்பதற்கு மன்றினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தகுந்த காரணங்களை கௌரவ பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் முன் 06/12/2022 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு பிரசன்னமாகி உங்கள் தரப்பு ஆட்சேபனையினைத் தங்களது சட்டத்தரணி ஊடாக முன்வைக்குமாறு இத்தால் நீவிர் கோரப்படுகின்றீர்கள்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று தொண்டமானாறு இறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு, வல்வெட்டித்துறை நகரசபை J/383 தொண்டமானாறு கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட "கழுவன உவாயடி" நிபர 58, 7/4 மேற்படி நிபர 45 1/4 மேற்படியிறை "கலட்டி" நிபர 35, 5/8 கூடிய நிபர 142 3/4, இதில் சொரியலாய் 1/12 பங்குக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற 6717ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்டதும் நில அளவையாளர் ஆ.கோவிந்தபிள்ளையால் 1962ம் ஆண்டு பங்குனி மாதம் 25ம் திகதி 243ம் இலக்கத்தில் அளந்து விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி 4B இலக்கத்துண்டுக்கு நிலப்பரப்பு மூன்று குளி பதினாலுடன் முப்பத்திரெண்டில் இருபத்திரெண்டு (நிபர 03 குளி 14,22/32). இதற்கு எல்லைகள் கிழக்கு குறித்த படத்தில் 4C துண்டு, வடக்கு றோட்டு மேற்கு பாதை தெற்கு குறித்த படத்தில் 4n, 4m இலக்க இவ்வெல்லைகளுக்குட் பட்டவை அடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

**நீதிமன்ற உத்தரவுப்படி**

**2022 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 18 ஆம் திகதி**

**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை.**

**வரைபு:-**
**மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி**
**T.தனுஷன்**

(CS21520) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்



தோற்றம் 15.06.1956 மறைவு 12.11.2022

### அமரர் அமிர்தலிங்கம் காண்டீபன் (ராஜு)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் (TULF) அமரர் அமிர்தலிங்கம் மங்கையற்கரசி தம்பதிகளின் மூத்த மகன் காண்டீபன் லண்டனில் காலமானார். அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்!

இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

**தகவல்:**
**தங்கமுகுந்தன் : 077 727 9238**
(முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர்)
மூளாய்.

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் திரு. கந்தையா சிவராசா

நாயன்மார்கட்டு சனசமூக நிலைய புலமைப்பரிசில் நிதிய தலைவர்

மண்ணில் 02.12.1935 விண்ணில் 21.11.2022

தன்னலம் கருதாக் கர்மவீரரே
எம் மண்ணின் மாசற்ற மாணிக்கமே
பேர்பெற்ற பெரு வாழ்வைத் துறந்து
காரிருள் ஊரை தவிக்க விட்டு
- போனதேனோ?

**நாயன்மார்கட்டு சனசமூக நிலையமும், புலமைப்பரிசில் நிதியமும்**

## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் சத்தியபாலன்

காலஞ்சென்றவர்களான புலோலி புங்கடி மயில்வாகனம் சுன்னாகம் மயிலணி சுந்தரம் ஆகியோரின் இளைய மகனான மயிலணி சுன்னாகம் சத்தியபாலன் அவர்கள் புதன்கிழமை காலமானார்.

இவர் கமலாதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான புத்தூர் தம்பி நடராசா சிவகாமி ஆகியோரின் மூத்த மருமகனும், கோசலா (இலண்டன்), ஸ்ரீகுகன் (கனடா), வாசுகி (மயிலணி), மயூரன் (சிட்னி), முகுந்தன் (மெல்பேர்ண்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேந்திரம், பிரபாதேவி, துரைராஜசிங்கம், சாந்தி, திருமகள் ஆகியோரின் அன்பு மாமனாரும், சத்தியன்-காயத்திரி, வித்தியா-மயூரன், சிந்து-ஜரொட், மனூரி, துவாரகா-மயூரன், தர்சிகா-நிரோஜன், சாம்பவி-ஜங்கரன், சிவகாமி, பாலாஜி, கோபிகா, கோஷிகன் ஆகியோரின் பிரியமிகு பேரனும், அமிர்தா, அமரா, ஜலா, முத்து, கைல், ஸேஜ், கிரிசா, விசாகா, தேஜஸ்வி, அபிலாஷினி ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற புலோலி புங்கடி சத்தியமூர்த்தியின் தம்பியும், பரமேஸ்வரி, சத்தியமூர்த்தியின் (நியுஸிலாந்து) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27.11.2022 ஞாயிறு காலை பத்துமணிக்கு அவரது மயிலணி இல்லத்தில் நடைபெற்று, பின் பூதவுடல் தகனத்துக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 21971) (3/6)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சரஸ்வதி



தோற்றம் 17.09.1945 மறைவு 24.11.2022

புலோலி தெற்கு, தேவரன் பகுதியைப் பிறப்பிடமாகவும், நறுவிலடி புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சரஸ்வதி நேற்று (24.11.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னார் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், வைரவிப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கணபதிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், கலைச்செல்வி, மதியரசன், குமணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், துவிதரன், ருக்மணி, மயூரி ஆகி யோரின் மாமியாரும், அஜந்தன் - கீர்த்தனா, நிதுஷா, கவீனன், கஜேந்திரன், மயூரி, ஆதிரன், சதுர்சன், பிரக்ஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மதுரன், விபிஸ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2022) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நறுவிலடி,**
**புலோலி தெற்கு,**
**புலோலி.**

(cs.21521) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 226 3986**

## மரண அறிவித்தல்

பிறப்பு 23 . 03 . 1954



இறப்பு 23 . 11 . 2022

"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது"
பிலிப்பியர் 3 : 20

### ஆபிரகாம் ஞானவெற்றி வீரசிங்கம் (Dr.அமலன்)

அலுப்பொல - இரத்தினபுரியினை பிறப்பிடமாகவும், உடுவில் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆபிரகாம் ஞானவெற்றி வீரசிங்கம் கடந்த (23.11.2022) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான போல் வல்லிபுரம் வீரசிங்கம் கிறேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை மனுவேற்பிள்ளை (உரிமையாளர் - K.L.A. அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ், பண்டத்தரிப்பு) ஞானமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் (புஸ்பா) அன்புக் கணவரும், சாமுவேல் நிமலச்சந்திரன் (முகாமையாளர் - இலங்கை வங்கி), கிறேஸ் நிமலதர்ஷினி (எழுதுவினைஞர் - இலங்கை வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானமொழி (உதவிப் பணிப்பாளர் - மத்தியவங்கி), ஜெயகாந்தன் (விவசாய போதனாசிரியர் - கைதடி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அரசிமலர் மற்றும் இன்பமலர், Dr.பிலிப், ஜேகப், காலஞ்சென்றவர்களான டானியேல், டேவிட் மற்றும் யோகமலர், நளினமலர், பிறேமமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோசுவா, ஸேன், யொஸ்வின், அஸ்லின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (25.11.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, இலங்கை பெந்தேகோஸ்தே சபையின் பிப்பிலி சேமக்காலை மானிப்பாயில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**அமலன் டிஸ்பென்சரி,**
**உடுவில், மானிப்பாய்.**
**தொடர்பு: 070 716 8298**

(cs.47816) (6.2)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரில் அடுத்தாண்டு 4,000 தாதியருக்குப் பணி



**கொழும்பு, நவ. 25**

**இலங்கைத் தாதியர்கள் 4 ஆயிரம் பேர் சிங்கப்பூரில் அடுத்த வருடம் வேலைக்காக இணைந்துக் கொள்ளப்படவுள்ளனர். சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்தார்.**

அதன்படி இருபது ஆண்டுகளுக்குப் பிறகு சிங்கப்பூர் சுகாதாரத் துறையில் பணியாற்றும் வாய்ப்பு இலங்கையர்களுக்குக் கிடைத்துள்ளது.

இதேவேளை இங்குள்ள அடிப்படைச் செயற்பாடுகள் குறித்து சிங்கப்பூர் சுகாதார அமைச்சின் 10 அதிகாரிகள் நாட்டுக்கு வருகை தந்து ஆராயவுள்ளனர் என மருத்துவர் ஹேமந்த ஹேரத் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ச-இ)

# அம்பாறைக்குத் தேசியப்பட்டியல் ஆலோசிக்காமல் வழங்கப்பட்டது

## மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

தேசியப் பட்டியல் பதவியை அம்பாறைக்கு வழங்கவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கவில்லை. என்றாலும் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடாமல் அந்த முடிவு எடுக்கப்பட்டது தவறான ஒரு விடயமாகும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜா.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைக்கப்பெற்ற தேசியப் பட்டியல் பதவியைப் பெற்றுக்கொள்ள நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கைத் தமிழரக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா அன்று தொடக்கம் இன்று வரை கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என்று வெளியாகியிருந்த செய்திகள் தொடர்பில் அவர் மனந்திறந்து பதிலளித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலின்போது தெரிவித்ததாவது:-

'கட்சிக்குள் இருந்த தவறான நடவடிக்கைகள் காரணமாக நாடாளுமன்றத் தேர்தலில் என்னால் வெற்றிபெற முடியாது போனது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை எனக்குப் பெற்றுக்கொடுக்க சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோர் என்னிடம் பேச்சு நடத்தினர். ஆனால், எமக்குப் பெண் பிரதிநிதித்துவம் இல்லை. அதனால் பெண் ஒருவருக்கு இந்தத் தேசியப் பட்டியல் பதவியை வழங்குமாறு கோரிக்கை விடுத்தேன்.

தேர்தல் பெறுபேறுகள் வெளியாகிய பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை திருகோணமலையில் சென்று சந்தித்தபோது கட்சியில் பெரும்பான்மையானவர்கள் தேசியப் பட்டியல் பதவியை எனக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருந்தனர். என்றாலும் இது தொடர்பில் முடிவெடுக்க மீண்டும் சம்பந்தனைச் சந்திக்கச் செல்வதற்கு முதல்நாள், கட்சியின் செயலாளரால் கையொப்பமிட்டு அம்பாறைக்குத் தேசியப் பட்டியல் பதவியை வழங்க வேண்டுமென்ற அறிவிப்பு வெளியானது.

உண்மையில் தேசியப் பட்டியல் பதவியை அம்பாறைக்கு வழங்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வில்லை. என்றாலும் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடாமல் அந்த முடிவு எடுக்கப்பட்டது தவறான ஒரு விடயமாகும். பதவிகளுக்காக நான் ஒருபோதும் ஆசைப்பட்டதும் இல்லை. அடிபணியவும் இல்லை. வாதாடவும் இல்லை. எனக்கு வரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நான் எமது மக்களுக்காகத் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டுதான் இருக்கின்றேன்' - என்றார்.

(ம-22)


## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி - மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப்பணியாளர்
**திரு.ச.சிவகஜன்**
அவர்களின் அன்புத் தாயார்

**தேவகி சண்முகநாதன்**

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம்**

(ம.18282) (2.6)

**Activa -2 மோட்டர் சைக்கிள் தேவை**

நல்ல நிலையிலுள்ள "Activa -2" மோட்டர் சைக்கிள் விற்பனைக்கு உள்ளதாயின் அறியத்தரவும்.

**077 527 1673**

## HOTEL AND RESTAURANT VACANCY

பருத்தித்துறையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள Hotel And Restaurant ஒன்றிற்கு
பின்வரும் வேலையாள்கள் தேவை.

1. **சமையலாளர்** (Chef /Cook) ஆண், பெண்
2. **சுத்தம் செய்பவர்** (Housr Keeping) ஆண், பெண்

Hotel வேலையில் அனுபவமுள்ள எவரும் விண்ணப்பிக்கலாம்.
தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு: 076 326 3188**

(NE 21519) (2.6)

## INVITATION FOR BIDS (IFB)

### KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

01. The Chairman, Local AuthorityProcurement Committee (LAPC)on behalf of the Karachchi Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for Construction of Two Storey Public Library Building at Karachchi Pradeshiya Sabha Kilinochchi ( Stage-I) as described below.

| No | Contract No | Contract Name | Tentative Estimated Cost (Rs. Mn) | Required Minimum CIDA Grade | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | NP/KN/KPS/COU/001/2022 | Construction of Two Storey Public Library Building at Karachchi Pradeshiya sabha Kilinochchi (Stage-I) | 40.73 | C5 or C4 Building | 180 Days |

02. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) procedure. And Public Finance Circulars No 03/2020 (i) and 04/2016 dated 11.01.2021 and 18.02.2021 respectively will be adopted.

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of Building Construction for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

04. Qualification requirements are indicated in Section 5 (Bidding Data and Contract Data) of the Bidding document.

05. Interested bidders may obtain further information from Chairman, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi, (T.P No: 0212285761, Fax No: 0212285690) and inspect the bidding documents at the address given below from 25th November 2022 until 22nd December 2022 during 09:00Hrs to 15:00Hrs on normal working days.

06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi from 25th November 2022until from 22nd December 2022 during 09:00Hrs to 15:00Hrs on normal working days upon payment of a non-refundable fee of Ten Thousand Rupees(Rs.10,000.00). The method of payment will be by cash.

07. Bids shall be delivered in duplicate to the address below at Chairman, Procurement Committee, Kilinochchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchion or before 14.00Hrs on 23rd December 2022 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

08. Bids shall be valid up to (91 days) 23rd February, 2023. All bids shall be accompanied by a Bid-Security, of Rs.611,000.00Bid Security shall be valid up to 23rd March, 2023.

09. Apre-bid meeting will be held at 11.00 Hrs on 13th December 2022 at Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.

**Chairman,**
**KarachchiPradeshiyaSabha,**
**A9 Road,**
**Kilinochchi.**

25.11.2022

(IN 18280)(3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின்...

தந்திர வலைக்குள் தமிழ்க் கட்சிகள் வீழ்ந்துவிடக் கூடாது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் மக்களை இரண்டாந் தரப் பிரஜைகள் ஆக்கி, இன முரண்பாடுகளை தீவிரமடையச் செய்து, ஒரு நீண்ட கால உள்நாட்டுப் போருக்கு வழி கோலி, பொருளாதாரத்தை சீர்குலைத்து, இன்றைய நெருக்கடி நிலைமை உருவாவதற்கான, அடிப்படைக் காரணம் இந்த நாட்டில் கடந்த 75 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள ஒற்றை ஆட்சி முறையே ஆகும்.

ஒற்றை ஆட்சி முறை அகற்றப்பட்டு, பல்லின, பலமத மக்கள் வாழும் பல்வேறு நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறையில் உள்ள சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சி முறை கொண்டு வரப்படவேண்டும் என்பதே தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் கோரிக்கையாகும்.

தற்போது பொருளாதார நெருக்கடியால் சரிந்து கொண்டிருக்கும் இலங்கைத் தீவை மீட்டெடுக்கவும், தூக்கி நிறுத்தவும், பொருளாதார வலிமை கொண்ட நாடுகளிடம் உதவி கோரி நிற்கும் இலங்கை அரசாங்கம் இந்த நாடுகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய கட்டாய நிலைமைக்குள் இருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, பொருளாதார சீரமைப்பை முன்னெடுக்கவேண்டிய இறுக்கமான சூழ்நிலைக்குள்ளும் சிக்கியுள்ளது.

நாட்டில் ஸ்திர நிலைமையை ஏற்படுத்த, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைத் தமிழ் மக்களின் சம்மதத்துடன் கொண்டுவர வேண்டிய அரசியற் சவாலை ஜனாதிபதியும் அவரின் அரசாங்கமும் சந்தித்திருக்கின்றது. அதனால்தான் தமிழ்க் கட்சிகளைப் பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி அவசரமாக அழைத்திருக்கிறார்.

அதேநேரம் நாடாளுமன்றத்துக்குள்ளும் புறமும் கடந்த சில தினங்களில் ஜனாதிபதி தெரிவித்திருக்கும் கருத்துக்கள் எல்லாமே, ஒற்றையாட்சி முறைக்குள் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தி, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அதற்குள் முடக்குவதற்கு அவர் முனைந்து நிற்கின்றார் என்பதை திட்டவட்டமாகக் காட்டுகின்றன. ஜனாதிபதியின் அழைப்புக்குப் பச்சைக் கொடி காட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்காமல் ஒதுங்கி நின்றதன் மூலம், அவரின் முயற்சிகளை அனுசரித்துச் செல்லும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தி உள்ளது. இதே வழியில் தான் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்திருக்கின்றது.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்குள்ளும், பெரும் எண்ணிக்கையில் உள்ள படைத்தரப்பினரின் பராமரிப்புக்கு மிகப் பெரும் தொகை நிதி மீண்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதை நிராகரித்து, வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்க இந்தக் கட்சிகள் தவறியுள்ளன. இவை எல்லாம், ஜனாதிபதியும் அவரின் தலைமையின் கீழ் உள்ள பொதுஜன பெரமுன அரசாங்கமும் விரித்திருக்கும் அரசியல் தந்திர வலைக்குள் இந்தக் கட்சிகள் விழுந்து விடுமா என்ற அச்சத்தையே தோற்றுவித்திருக்கின்றது. ஒற்றையாட்சிக்குள் நீதியானதும் நிலையானதுமான அரசியல் தீர்வு என்பது ஒருபோதும் சாத்தியம் இல்லை என்றே இந்தக் கட்சிகள் எல்லாம் கூறி வந்துள்ள பின்னணியில், அரசியல் தீர்வின் அடிப்படையாக, இணைப்பாட்சிக் கோரிக்கையை முன்வைத்து வலியுறுத்த தவறினால் அது ஒரு வரலாற்றுத் துரோகமாகவே அமையும்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள சிங்கள பௌத்த பேரினவாத தலைமைகளோடு கொஞ்சவோ அல்லது கெஞ்சவோ செய்யாமல், தமிழ்த் தேசியம் சார்ந்த அரசியற் கட்சிகள் அனைத்தும், கொள்கை அடிப்படையில் ஒரு வழி நின்று நேர் வழி செல்ல வேண்டிய மிக முக்கியமான காலமிது. இந்த விடயத்தில் நேர்மையான நிலைப்பாடே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது - என்றுள்ளது. (அ-எ-26)

## யானை...

யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. தகவல் அறிந்த பிரதேசவாசிகளும், பொலிஸாரும் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டு, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். (அ-எ-19)

## அரசின்...

பிரதேசங்களில் இருந்து போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டும். அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு அச்சமடைய வேண்டாம். மக்கள் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ஸ்திரமான கொள்கை இல்லாமல் இந்த அரசாங்கம் செயற்படுகிறது. எதிர்கால தலைமுறையினரது எதிர்காலம் இல்லாமற்போகுகிறது என்பதை நாட்டு மக்கள் இனியாவது விளங்கிக் கொள்ளவேண்டும்.

பாதுகாப்புத் தரப்பினரும் அரசாங்கத்தின் முறையற்ற வகையில் செயற்பாடுகளுக்கு அகப்பட்டுள்ளார்கள். ஜனநாயகப் போராட்டத்தின் ஊடாகவே தீர்வு காணமுடியும். மக்கள் போராட்டத்துக்கு ஊழல் அரசியல்வாதிகள் அச்சம் கொண்டுள்ளார்கள்.

காலிமுகத்திடலிலும், கொழும்பிலும் போராட்டத்தில் ஈடுபட முடியாவிட்டால் பரவாயில்லை. பொதுமக்கள் தங்களின் பிரதேசங்களில் இருந்து போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு அச்சமடைய வேண்டாம். மக்கள் போராட்டம் நிச்சயம் வெற்றிபெறும். ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் பொறுப்புடன் செயற்படவில்லை. புலனாய்வுப் பிரிவை மறுசீரமைக்க




வேண்டும்.

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களுக்கு எதிரான அடக்குமுறையை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்கைது செய்யப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகேயை விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்துகின்றேன் - என்றார். (அ-எ-இ)

## ஆணை...

நாடாளுமன்றத்தில் கொண்டுவருவேன்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றின் மீதான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை மறுசீரமைக்க வேண்டுமாயின் ஜனாதிபதி புதிய மக்களாணையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் நாட்டு மக்கள் இவரது கொள்கையை தொடர்ச்சியாக புறக்கணித்துள்ளார்கள். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்ற விவாதத்தின்போது அவதானம் செலுத்தப்பட்டது. 13 பிளஸ் அல்லது அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பாற்பட்டு செயற்பட புதிய மக்களாணை அவசியமாகும். பொருளாதாரம் மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்காக ஜனாதிபதி அக்கறையுடன் செயற்படுகிறார். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நாட்டு மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரமே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்கிறார். நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காகவே 69 இலட்ச மக்கள் கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆணை வழங்கினார்கள். அரச நிர்வாகத்தில் பலவீனமடைந்தாலும், ஏனைய நெருக்கடிகளாலும் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விலக நேரிட்டது. இதுவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சாதகமாக அமைந்தது.

பொருளாதார மறுசீரமைப்புக்காக தற்போது செயற்படுத்தும் தீர்மானங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயற்படுத்த முயற்சித்தார். தேர்தலில் தோல்வியடைந்தார். 2004 ஆம் ஆண்டு தேர்தலிலும் தோல்வியடைந்தார். 2019 ஆம் ஆண்டு தேர்தலிலும் தோல்வியடைந்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கையை ஏற்கமுடியாது என நாட்டு மக்கள் கடந்த 20 வருட காலத்தில் மூன்று முறை தொடர்ச்சியாக உறுதிப்படுத்தினார்கள்.

புதிய மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டுமாயின் அவர் மக்களாணையை கோர வேண்டும் - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறக்குமதி...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கவர்கள், கைப்பைகள், குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள் போன்ற பல பொருள்களை இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டிருந்த தடையே தளர்த்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற ரீதியில் இதற்கான வர்த்தமானியில் கையொப்பமிட்டுள்ளார். அதேவேளை, இறக்குமதிக்கான தடை தளர்த்தப்பட்டுள்ளபோதும், வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை காரணமாக இறக்குமதிகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ள வேண்டி ஏற்படலாம் என்று இறக்குமதியாளர்கள் தரப்பில் கூறப்படுகின்றது. (அ-எ-இ)


## மரண அறிவித்தல்



பிறப்பு 13 . 03 . 1949 — இறப்பு 23 . 11 . 2022

### திருமதி நல்லையா அமிர்தராணி (மாணிக்கம்)

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் இல-06 கணேசபுரம் கிளிநொச்சியை நிரந்தரவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லையா அமிர்தராணி (மாணிக்கம்) அவர்கள் 23.11. 2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா அவர்களின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், மோகனராசா, சுபாஜினி, சுவேந்திரராஜா, சிவலோகராஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவரட்ணராஜா, கிருஷ்ணராஜா ஆகியோரின் சிறிய தாயாரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநகர் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளிற்கு:**
நவம்-0778866898
மோகன்-0775924978
சின்ராஸ்-0774188209
சூட்டி-0771236021

**தகவல்:** குடும்பத்தினர்.

(CR 38535) 1/6

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 03 . 1960 — மறைவு 22 . 11 . 2022

### பரமகுரு கெங்கேஸ்வரன் (கெங்கா)
(உரிமையாளர் துஷா ரவல்ஸ்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பரமகுரு கெங்கேஸ்வரன் (உரிமையாளர் துஷா ரவல்ஸ்) அவர்கள் கடந்த (22.11.2022) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமகுரு (சின்னமணி) நாகரத்தினம் தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சிவராஜா நாகம்மா தம்பதியரின் மருமகனும், இராஜரதியின் (ரதி) அன்புக் கணவரும், லகோஷனா (கோஷி-அவுஸ்திரேலியா), துஷாந்தி (துஷா), ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜந்தனின் அன்பு மாமனாரும், சோசனா, தீபிஷனா, பபிசன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்ற நவரட்ணம் (சந்திரன் K.P.N), சுபத்திரா (ராசாத்தி), சுமங்கலா (கலா), சதீஸ்குமார் (அப்பன், பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கிருபாகரனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு சாவகச்சேரியில் உள்ள அவரது அம்மாவின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
ரதி (மனைவி) 077 1530 979
லகோசனா (மகள்) +61499656326
துஷாந்தி (மகள்) 077 8797 166
கலா (தங்கை) 077 7465288
ராசாத்தி - தங்கை 077 314 6038
அப்பன் (தம்பி) 0033699739246

**தகவல்: குடும்பத்தினர்.**

சாவகச்சேரி ஆதார
வைத்தியசாலை முன்பாக,
கட்டுக்காணி லேன்,
சாவகச்சேரி.

(CR 38533) 1/6

## மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 08 . 1947 — இறப்பு 24 . 11 . 2022

### திருமதி பரஞ்சோதி இரத்தினபூபதி

இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும் குமர கோட்டம் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி இரத்தின பூபதி அவர்கள் நேற்று (24.11.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரஞ்சோதி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மயில்வாகனம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா அன்னமுத்து தம்பதியரின் மருமகளும், மதிவதனா (பிரான்ஸ்), கோகிலவதனி (வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), சதீஸ்கரன் (உரும்பிராய் சைவத்தமிழ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேந்திரன் (பிரான்ஸ்), பொன்சத்தியலிங்கம் (இ.போ.ச. கோண்டாவில்), சாம்பவி (பிரதேச செயலகம், வவுனியா தெற்கு) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆரூஷன், சுவஸ்திபன், ஷைந்தவி, சஸ்ணவி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் இந்திரலீலா, மோகனலீலா, சிவசுப்பிரமணியம் (சுவிஸ்), காலஞ்சென்ற சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2022) வெள்ளிக்கிழமை மதியம் 01.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

**தகவல்:** குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 07 . 1953 — மறைவு 24 . 11 . 2022

### அருந்ததிதேவி குமாரசுவாமி

மலேசியாவை பிறப்பிடமாகவும் மல்லாகம் வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட அருந்ததிதேவி குமாரசுவாமி நேற்றையதினம் (24.11.2022) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி இராசம்மா தம்பதியரின் இரண்டாவது புதல்வியும், மற்றும் ரஞ்சிதமலர், காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் குணசிங்கம் (ஓய்வுபெற்ற முகாமையாளர், கொமர்ஷல் வங்கி), வசந்தாதேவி, சாந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், Dr. தியாகராஜா (மெடி எயிட்ஸ், கல்வியங்காடு), கலோஜினி, மகேஸ்வரன் (உரிமையாளர், காசிப்பிள்ளை பல்பொருள் வாணிபம்-சங்கானை), கமலேந்திரன் (லண்டன்) ஆகியோரது மைத்துனியும், வதனி (சிங்கப்பூர்), றிஸ்வி (ஆசிரியர், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), Dr. பிரசாந்தன் (தேசிய வைத்தியசாலை-கொழும்பு) ஆகியோரது பாசமிகு சிறிய தாயும், ஸ்ரீராம் (மின்சார சபை - பருத்தித்துறை), தர்ஷிகா ஆகியோரின் அன்பு மாமியும், சரணியா (செலான் வங்கி - சங்கானை), சைலஜா, நிரேஸ் (லண்டன்), கோபி (லண்டன்) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: கு.குணசிங்கம்**
077 8729 092
076 655 1274 (மகேஸ்வரன்)

(CR 38534) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டங்களை...

வன்முறைக்கும் அனுமதிக்க முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போராட்டங்கள் மூலம் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எந்த விதத்திலும் இடமளிக்க முடியாது. அதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் . வீதியில் நின்று போராட்டம் நடத்துவதால் நாடாளுமன்றத்தைக் கலைக்கப்போவதில்லை.

வன்முறைக்கு ஒருபோதும் இடம் கிடையாது. வீதியில் இறங்கி எவரும் நாடகமாடவும் முடியாது. அதேபோன்று அரசாங்கத்தை வீழ்த்த முற்படும் செயற்பாடுகளை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கவும் முடியாது. அரசமைப்பின் 9 ஆவது சரத்துக்கு இணங்க படையினர் அதைத் தடுத்து நிறுத்தவேண்டும். மக்களுக்கான போராட்டம் என்ற போர்வையிலேயே இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அராஜகம், வன்முறை ஆகியவை மனித உரிமைக்குள் உள்ளடங்காது. அது மனித உரிமைக்கு முற்றிலும் எதிரானது. அந்த வகையில் மனித உரிமை என்ற போர்வையில் அராஜகத்துக்கும் வன்முறைக்கும் இடமளிக்கமுடியாது. அவ்வாறு வன்முறையில் ஈடுபடுபவர்களை மனித உரிமை என தெரிவித்து பாதுகாக்கவும் முடியாது. அதற்கான கட்டுப்பாடுகள் தொடர்பில் எமது அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை மீறி எவரும் செயற்படமுடியாது.

மனித உரிமை பாதுகாவலர்கள் எனக் கூறிக்கொண்டு வெளிநாடுகளில் டொலரைப் பெற்று நாட்டில் நெருக்கடி நிலையை உருவாக்குவதற்கு எந்த வகையிலும் இடமளிக்க முடியாது. வீதியில் நின்று போராட்டம் நடத்துவதால் நான் நாடாளுமன்றத்தைக் கலைக்கப்போவதில்லை. ஒரு சில குழுக்களே இவ்வாறு செயற்படுகின்றன. பெரும்பாலானோர் அமைதியாகவே உள்ளனர். பல்கலைக்கழக மாணவர்கள் எவரையும் நாம் கைது செய்து சிறையிலடைக்கவில்லை. வசந்த முதலிகே எத்தனை வருடங்கள் பல்கலைக்கழகத்தில் இருக்கின்றார்? அவர் இன்னும் பல்கலைக்கழக மாணவரா? என்ற கேள்வியே எழுகிறது.

சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட முற்படும் பொலிஸாரை மனித உரிமை என்ற போர்வையில் சிறையில் அடைக்கப் பார்க்கின்றனர். அன்றாடச் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் வீதிகளில் போராட்டம் நடத்துவதை தடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. அவ்வாறு தடுக்கும் போது அவர்கள் மீது குற்றம் சுமத்தி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்கின்றனர். அது தொடர்பில் நான் கவனம் செலுத்தியுள்ளதுடன் அரசமைப்பின் 15 ஆவது சரத்தின் கீழ் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் சட்டமா அதிபரைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

எனது வீட்டுக்குத் தீ வைத்தனர். எனது பிரதான பாதுகாப்பு அதிகாரியை வேலை நீக்கம் செய்ய முயற்சித்தனர். மனித உரிமை என்ற போர்வையில் அநாவசியமான தலையீடுகளை மேற்கொள்ள முடியாது. அரசாங்கத்துக்கு ஆளும் கட்சி மட்டுமன்றி எதிர்க்கட்சியும் அவசியம். அதேபோன்று நாட்டுக்காக சேவை செய்ய அனைத்து அதிகாரிகளும் வேண்டும். அத்துடன், அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

நாட்டைப் பாதுகாப்பதில் சிறு பதவிகளில் உள்ளவர்கள் முதல் பீல்ட் மார்ஷல் பதவியில் உள்ளோர் வரை அனைவருக்கும் பொறுப்பு உள்ளது. அதை அவர்கள் நிறைவேற்றவேண்டும். பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு அதிகமாக உள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. 25 ஆயிரம் பேரை வீதியில் விட முடியாது. படையினரின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தாலும் பதவி உயர்வுகள் அதிகரித்துள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். உணவுப் பாதுகாப்புக்கான செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

அதேபோன்று நாட்டின் எதிர்காலம் தொடர்பில் நாம் சிந்திக்கவேண்டும். இன்று பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் இல்லை என்பதற்காக எதிர்காலத்தைப் பற்றியும் அவ்வாறு நாம் சிந்திக்க முடியாது. நிலைமை மாறிவிடும். உலக அரசியல் தொடர்பில் அவதானம் செலுத்தவேண்டும். இந்து சமுத்திரம் பாதுகாக்கப்படவேண்டும். எமது கடல் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் 2040 ஆம் ஆண்டுக்குள் கடற் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். எமது பொருளாதாரம் நூற்றுக்கு எட்டு வீதமாக அதிகரிக்குமானால் பாதுகாப்புக்கான செலவுகளையும் அதிகரிக்க முடியும். போர்க் கப்பல்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும். அதற்கான செயற்பாடுகளில் எமது கடற்படையை ஈடுபடுத்தலாம். தேசிய பாதுகாப்பு செயலகம் ஒன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நாம் இப்போதிருப்பதை விடவும் சிறந்த இராணுவத்தினரை உருவாக்குவது அவசியம். பொலிஸ் துறை தொடர்பில் கவனம் செலுத்துவதுடன் அதற்காக பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் புதிய விடயங்களை உள்ளடக்க வேண்டும். அதைப் புதிதாக தயாரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (அ-எ-22)

## அடக்குமுறை...

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக மீண்டுமொரு போராட்டம் நடத்தப்படும் என்று கூறப்படுகின்றது. அதற்கு நான் இடமளிக்கப் போவதில்லை. இராணுவத்தை களமிறக்குவேன். அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துவேன்' என்று பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்தநிலையிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையர்கள், பொருளாதார நெருக்கடியால் முன்னெப்போதும் இல்லாத வகையில் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். அதனால் பொதுமக்கள் மத்தியிலிருந்து எதிர்ப்புக்கள் எழுந்தன. உணவு விலை, பணவீக்கம் கடந்த ஒக்ரோபர் மாதம் 85 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தது. வெளிநாட்டு நாணயத்தின் கடுமையான பற்றாக்குறை, அத்தியாவசிய மருந்துகள் உட்பட பல இறக்குமதிகள் பற்றாக்குறையாகவோ அல்லது பெற முடியாதவையாகவோ இருந்தன. அதேநேரம், இலங்கையின் சனத்தொகையில் 28 சதவீதமானோர் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் என்றும் இந்த ஆண்டு வறுமை விகிதம் இரட்டிப்பாகியுள்ளது எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்தப் பின்னணியில் அமைதியான போராட்டத்தை அரசாங்கம் ஒடுக்கியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆர்ப்பாட்டங்களை நசுக்கியதுடன், மாணவர் செயற்பாட்டாளர்களை தடுத்து வைப்பதற்கு இழிவான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை பயன்படுத்தியுள்ளார். மீண்டும் பெரும் எதிர்ப்புக்கள் ஏற்பட்டால் பாதுகாப்புப் படையினரை நிலைநிறுத்துவேன் என்றும், அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்துவேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

அமைதியான முறையில் எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை உள்ளிட்ட மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காத அரசியல்வாதிகளிடமிருந்து தவறான நிர்வாகத்துக்கோ அல்லது ஊழலுக்கோ எதிரான நடவடிக்கைகளை இலங்கையர்கள் எதிர்பார்க்க முடியாது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட இலங்கையின் சர்வதேச பங்காளிகள் நெருக்கடியை எதிர்கொள்வதற்கான அத்தியாவசிய நடவடிக்கையாக, மனித உரிமைகள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பது அவசியம் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. (அ-எ-இ)

## 0.3 பில்லியன்...

2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு நாணய ஒதுக்கம் 1.7 பில்லியன் டொலராக இருந்தது. இதில் சீன மக்கள் வங்கியால் நாணய இடமாற்ற வசதிக்காக வழங்கப்பட்ட 1.4 பில்லியன் டொலரும் அடங்குகின்றது.

அதேவேளை, பணம் அச்சிடலில் படிப்படியான குறைவு ஏற்பட்டுள்ளது என்று மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 341 பில்லியன் ரூபா அச்சிடப்பட்டது. ஆயினும் கடந்த ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதியில் 47 பில்லியன் ரூபா மட்டுமே அச்சிடப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)

## கனடாவுக்கு...

என்றும், வெளிவிவகார அமைச்சின் யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகத்தினரால் இது தொடர்பில் இறந்தவரின் குடும்பத்தினருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து "சனிட்டைசர்" அருந்தி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தவரே உயிரிழந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (அ-எ-159-9)

## 'ஐஸ்'க்கு'...

மற்றும் அபாயகர ஔடதங்கள் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தத்தின் அடிப்படையில் இந்தத் தண்டனை வழங்கப்படவுள்ளது.

குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக இந்தப் புதிய சட்டம் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தச்) சட்ட வரைவு நேற்றுமுன்தினம் முதல் 2022ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தச்) சட்டமாக நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்தச் சட்ட வரைவில் கையொப்பமிட்டு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்றுமுன்தினம் சான்றுரைப்படுத்தினார். போதைப்பொருளைக் கொண்டு வருதல், வைத்திருத்தல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பில் காலத்தின் தேவைக்கு ஏற்ப சட்டங்களை வலுப்படுத்தும் வகையில் இந்தச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த மாத முதல் வாரமளவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில், 103 கிலோகிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சுற்றிவளைப்புக்களில் 7 ஆயிரத்து 536 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-எ-இ)

**Restaurant நடத்துவதற்கு வசதியான வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நகரப் பகுதியில் பாரம்பரிய முறையில் **Restaurant** நடத்துவதற்கு குடிதண்ணீர், மின்சாரம், அதிகளவான அறைகள், விசாலமான நிலப்பரப்பு, அமைதியான சூழல் மற்றும் வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய வசதியான வீடு வாடகைக்குத் தேவை.

**தொடர்பு:071 411 5002**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

Congratulations



எமது கிராமத்தைச் சேர்ந்தவரும், எமது நிலைய அங்கத்தவருமான

**திருமதி நிந்துஜா பன்னீர்தாசன்**

அவர்கள் மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி **இரா.கண்ணன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக** நேற்று (24.11.2022) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். மேலும் பல சமூக சேவைகளை சிறப்பாக செய்வதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.க.தம்பிராசா**
**(தலைவர்)**
**அறிவொளி சனசமூக நிலையம்**
**ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விகாரைக்கான...

எடுக்கவேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

குருந்தூர்மலை தொடர்பான வழக்கு நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ரி.சரணவராஜா முன்னிலையில் எடுக்கப்பட்டது. அதன்போது மேற்கண்ட கட்டளை நீதிமன்றால் வழங்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு முதல் முல்லைத்தீவு குருந்தூர்மலைப் பகுதியில் தொல்லியல் ஆய்வு என்னும் பெயரில் தமிழ் மக்களின் வழிபாட்டு இடம் அழிக்கப்பட்டு பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வழக்கில் நீதிமன்றம் பல்வேறு கட்டளைகளை வழங்கியிருந்த போதும், அவற்றை உதாசீனம் செய்து அந்தப் பகுதியில் பௌத்த விகாரைக் கட்டுமானங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கட்டுமானங்கள் நடைபெறும் பகுதிக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரணவராஜா, சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதி சொலிட்டர் ஜெனரல் மற்றும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர். அப்போது இருந்த நிலைமையைத் தொடர்ந்தும் பேணவேண்டும் என்றும், புதிய கட்டுமானங்களை மேற்கொள்ளக் கூடாது என்றும் நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தது.

ஆயினும் அந்தக் கட்டளையை மீறி கட்டுமானங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயத்தினரும், மக்கள் பிரதிநிதிகளும் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இது தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் கடந்த ஜூலை மாதம் மன்று கட்டளை ஒன்று வழங்கி இருந்தது. கடந்த ஜூன் மாதம் எந்த நிலையில் குருந்தூர்மலை பிரதேசத்தில் கட்டுமானங்கள் இருந்தனவோ அதேநிலையைத் தொடர்ந்தும் பேண வேண்டும் என்றும் புதிதாக மேற்கொண்டு கட்டுமானங்களை செய்யமுடியாது என்றும் அந்தக் கட்டளையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, கடந்த ஜூலை மாதம் வழங்கிய நீதிமன்ற கட்டளையை அவமதித்து யாராவது புதிதாகக் கட்டடங்களை அல்லது மேம்படுத்தல்களை அமைத்தால் அது நீதிமன்ற அவமதிப்பாகன் கருதமுடியும் என்றும் அவ்வாறு சம்பவங்கள் இடம்பெற்றால் அது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

(அ-எ-19)


### கனரக சாரதி தேவை

யாழ். மாவட்டத்திற்குள் பொருட்களை விநியோகம் செய்வதற்கு கனரக சாரதி அனுமதி பத்திரம் உடைய சாரதி தேவை.

தொடர்பு: **077 4821 969**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு.**

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்:-**

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

**தொடர்பு:- ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

### காணி விற்பனைக்கு

கிழக்கு கோண்டாவில் வீதியும், இராச வீதியும் இணையும் சந்தியில் வடக்கிலிருந்து 500 M தூரத்தில் பிரதான வீதிக்கு அருகில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் இல்லை.

தொடர்பு நேரம் :- மாலை 4 - 6 மணி

தொடர்பு: **077 885 5070**

(CS 1864911-6)

### விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு கயட்டைப்புலம் வீதியில் நிலப்பரப்பு முறையே 10, 4 இரண்டு காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
பகுதியாகவும் பிரித்து வழங்கப்படும்.

தொடர்பு:- **077 843 5502**
**074 373 9982**


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் அருள்நங்கை சண்முகநாதன்

(புதிய உயர் கல்வி நிர்வாகியும், இந்து நாகரிக விரிவுரையாளரும்)

**தோற்றம்** **31.07.1951** — **மறைவு** **27.10.2022**



அன்புக்கு இலக்கணமாய் அவனி தனில் வாழ்ந்து
பண்புடமை காத்து நேசமுடன் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
நல்லவராய் நாணயமாய் நல் ஆசானாய்
துன்புற்றோர் துணை நீக்கி துணைக் கரமாய் விளங்கினீர்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாய் போனதுவோ
எங்கள் உயிர் வாழும் வரை எந்நாளும் மறவோம் உம் திருமுகத்தை
விண்நோக்கி, எமைவிட்டு சென்றாலும் - எம்
யாவர் இதயத்திலும் என்றும் நிலைத்திருப்பீர்கள்
"சந்துக்குட்டி உன்னுடன் நாம் இணையும் காலம் தான்
எமக்கு மகிழ்வும் நின்மதியும்" என கவிதை எழுதினீர்கள்
மகனைக் கண்டு மகிழத்தான் இருவரும் விரைந்தீர்களோ?
உங்கள் மூவரையும் இழந்து நாம் கலங்கித் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.....
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.......

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (26.11.2022) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்று அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"சண்முகநாதம்"
கட்டைப்பாலி வீதி,
4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.